# யா/புற்றளை மகா வித்தியாலயம்

## க.பொ.த.உயர்தரம் - இந்துநாகரிகம் - செயலட்டை- 01

## அலகு – இந்துக் கல்விப் பாரம்பரியம்

## வினாப்பத்திரம்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

01. இந்துக் கல்விப் பாரம்பரியம் எதனை அடிப்படையாகக் கொண்டது?

02. குருகுலக் கல்வி எவற்றுடன் நெருங்கிய தொடர்புடையது?

03. குருகுலக் கல்வி என்றால் என்ன?

04. குருகுல வாசக் கல்வி முறையை விபரித்துக் கூறும் நூல் எது?

05. புராண, இதிகாச காலங்களில் கல்வி நிலையங்களாகச் சிறப்புப் பெற்றவை எவை?

06. புராண, இதிகாச காலங்களில் கல்வியாகப் போதிக்கப்பட்டவை எவை?

07. இராமாயணத்தில் இராமனும் தம்பியரும் எங்கு? எவரிடம் கல்வி கற்றனர்?

08. மகாபாரதத்தில் கிருஷ்ணரும் குசேலரும் எங்கு? எவரிடம் கல்வி கற்றனர்?

09. மகாபாரதத்தில் பாண்டவர்களும் கௌரவர்களும் எங்கு? யாரிடம் கல்வி கற்றார்கள்?

10. வட இந்தியாவில் அறிவு சான்ற ஆசிரியர்களால் சிறப்பெய்தி பெருந்தொகையான மாணவர்கள் கல்வி கற்கும் கல்விச் சாலைகளாகவும் பின் பல்கலைக்கழகங்களாகவும் விளங்கிய நகரங்கள் எவை?

11. வட இந்தியாவில் சிறப்புப் பெற்று விளங்கிய கல்வி நிறுவனம் உள்ள நகரம் எது?



Prepared by : Mrs. S. Suresh

VadaICTEC

12. வடமேற்குப் பகுதியில் சிறப்புப் பெற்று விளங்கிய கல்வி நிறுவனம் உள்ள நகரம் எது?

13. வாரணாசி எத்தகைய கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தது?

14. தட்ச்சீலம் எத்தகைய கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தது?

15. தட்ச சீலத்துடன் தொடர்புடைய பேரறிஞர்கள் யாவர்?

16. குப்தர் காலத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்கிய கல்வி நிலையங்கள் எவை?

17. நாலந்தா தலை சிறந்த கல்விப் பீடமாக விளங்கியமை பற்றி உறுதி செய்வது எது?

18. சங்க இலக்கியங்களில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இலக்கியம் எது?

19. சங்கமருவிய காலத்தில் கல்வியின் சிறப்புப் பற்றிக் கூறும் நூல்கள் எவை?

20. பல்லவர் - பாண்டியர் காலத்தில் கல்விக்கூடம் எப்பெயரால் சுட்டப்பட்டது?

21. காஞ்சி நகர் கல்வியில் சிறந்திருந்தமையை எடுத்துக்காட்டும் பாடலடி யாது? யாரால் பாடப்பட்டது?

22. சோழராட்சிக் காலத்தில் இந்துக் கல்வி மரபு எதனூடாக வளர்க்கப்பட்டது?

23. சோழராட்சிக் காலத்தில் வேதக் கல்வியோடு கலை வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்தவை எவை?

24. நாயக்கர் காலத்தில் கல்வி மரபைப் பேணிப் பாதுகாத்தவை எவை?

25. ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் இந்துக் கல்விப் பாரம்பரியத்தைப் பேணியவை எவை?ஷ





VadaZICTEC

26. 19ம் நூற்றாண்டில் இந்துமக்களிடையே சமய விழிப்புணர்வு காரணமாக தோன்றிய சமய நிறுவனங்கள் எவை?

27. இலங்கையில் அனுராதப்புரத்தை ஆண்ட பண்டுகாபயன் இராசகுமாரனுக்குரிய கல்வியை யாரிடம் கற்றான்?ஷ

28. இலங்கையில் கல்விப் பாரம்பரியத்தில் அரண்மனைகளிலும் வித்தியா பீடங்களிலும் கற்பிக்கப்பட்டவை எவை?

29. யாழ்ப்பாண இராச்சிய காலங்களில் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தவர்கள் யாவர்?

30. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் சாதாரண பொது மக்களுக்கான கல்வியை மேற்கொண்ட நிறுவனங்கள் எவை?

31. சைவக் கல்விப் பாரம்பரியத்தை பாடசாலைகளின் ஊடாக வழங்கச் செய்தவர் யார்?

32. ஆறுமுகநாவலரால் எப்பாடசாலைகள் ஊடாக கல்விப்பாரம்பரியம் மேற்கொள்ளப்பட்டது?

33. 20ம் நூற்றாண்டில் இந்துப் பாடசாலைகளை நிறுவி கல்விப்பணி புரிந்த நிறுவனம் எது?

34. இந்துக் கல்விப் பாரம்பரியத்தை முன்னெடுக்க அநாதை இல்லங்களை நிறுவி பணி புரிந்தது எது?

35. ஆன்மீக ஈடேற்றம் சார்ந்த வேத, உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்ட கல்வி எவ்வாறு சுட்டப்பட்டது?

36. உலகியல் சார்ந்த தொழில் சார் கல்வியைப் பெறுதல் எவ்வாறு சுட்டப்பட்டது?

37. புராதன கல்வி மரபில் கல்விக்குரிய காலமாகக் கருதப்பட்டது எது?

38. புராதனக் கல்வியில் கல்விக்கு உரித்துடையோர் யாவர்?

39. குருகுல கல்வி முறையில் வயதெல்லையை மூவர்ணத்தாருக்கும் வேறுபடுத்துவது எது?





VadaZICTEC

40. குருகுலக் கல்வியை முடித்து குருதட்சணை வழங்கிய சீடன் எவ்வாறு அழைக்கப்பட்டான்?

41. குருவும் சீடனும் சேர்ந்து வேதங்களை ஓதிய முறையினைக் கூறும் சூக்தம் எது?

42. குருகுல வாசமும் குருகுலக் கல்வியும் எம்மாதத்தில் ஆரம்பாகியது?

43. புராதனக் கல்வி முறையினை இரண்டு வகையாகப் பிரிக்கும் உபநிடதம் எது?

44. குருகுல வாசத்தின் போது அவசியமாகப் போற்றப்பட்டவை எவை?

45. குருகுலக் கல்வியின் முடிவில் கல்வியின் இலட்சியங்கள் குருவின் அறிவுரைகளாகக் கூறப்பட்ட விடயங்கள் இடம்பெறும் உபநிடதம் எது?

46. உபநிடதக் கல்வி முறையில் கையாளப்பட்ட உத்திகள் எவை?

47. சாந்தோக்கிய உபநிடதத்தில் போதிக்கப்பட்ட கல்விகள் எவை?

48. ஆன்ம வித்தையைக் கற்பிப்பவர் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

49. உலகியலறிவைத் தருகின்ற கருவி நூல்களைப் போதிப்பவர் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

50. இந்துக்களிடையே துறவோர் அமைப்புக்கள் தோன்றி மடங்களில் எக்கல்வியைப் போதித்தன?

VadaZIC TEC